Registered as a News paper | பக்கங்கள் 6 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | பங்குனி 29 | (11-4-94) | திங்கட்கிழமை | ஓசை 52

## 12,000 வட-கிழக்கு ஊழியர் நட்டஈட்டிற்கு விண்ணப்பம்

வடக்கு கிழக்கிலுள்ள 12,000 அரச ஊழியர்கள் போரில் தமக்கு ஏற்பட்ட சொத்து இழப்பிற்கு அரசிடம் நட்டஈடு கோரியுள்ளனர் என புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநலன்துறை அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவர்களுக்கான நட்டஈட்டை வழங்க சுமார் 746 மில்லியன் ரூபா தேவை எனஅவ்வதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்தே அதிகளவு அரச ஊழியர்கள் நட்ட ஈட்டைக் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அரச ஊழியர்களுக்கு இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட இழப்புகளுக்கு நட்டஈடு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்ட போதும் அரசாங்கம் இது குறித்து அக்கறை காட்டவில்லை என ஊழியர்கள் கூறுகின்றனர்.

## நரோமா பயணிகள் கவனத்திற்கு

நரோமா கப்பலில் இன்று பயணம் செய்யவுள்ள பயணிகளை மதியம் 12 மணிக்கு முன்பாக பருத்தித்துறை இறங்கு துறைக்கு தவறாது சமூகம் தரும்படி மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை ஏற்கனவே 12ஆம் திகதி பயணம் செய்ய முடியும் என அறிவிக்கப்பட்ட பிரயாணிகளும் 11 ஆம் திகதி பருத்தித்துறை இறங்கு துறைக்கு தவறாது சமூகம் அளிக்கும் படியும் அவர் கேட்டுள்ளார். (இ)

# கொழும்பில் வீடு வீடாகச் சோதனை; புலிகளைப் பிடிக்க தீவிர முயற்சி

## 30 இலங்கைத் தமிழர் கெய்ரோவில் கைதாகினர்

(கொழும்பு)

எகிப்து தலைநகர் கெய்ரோவில் 30 இலங்கைத் தமிழர்கள் போலி பயணச்சீட்டுகளோடு கைதாகியுள்ளனர். இவர்கள் தற்போது சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

போலிப் பயணச்சீட்டுகளுடன் இவர்கள் வேறொரு நாட்டிற்குச் செல்ல தயார் நிலையில் இருந்த போதே கைதானதாக தெரிவிக்கப்படுகிறது.

## அகதிகளுக்கான செலவிற்கு சிகரெட் விலை உயர்வு

### நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

(கொழும்பு)

பாதுகாப்பு செலவினம் மற்றும் அகதிகளுக்கான செலவினம் ஆகியவை அதிகரித்ததால் சிகரெட் விலையை உயர்த்த நேரிட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி எம். பி. எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், அகதிகளுக்கான செலவினத்திற்கென வரவு - செலவுத் திட்டத்தில் 100கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அச்செலவினம் தற்போது 300 கோடி ரூபாவாக உயர்ந்துவிட்டது என்றார்.

## சேவைக்கால அடிப்படையில் பொலிசாருக்கு பதவிஉயர்வு

### ஜனாதிபதி உத்தரவு

## தமிழர்கள் பெருமளவில் கைது

(கொழும்பு)

கொழும்பு குண்டுவெடிப்புக்களுக்கு பின்னணியில் இருந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் விடுதலைப் புலிகளையும், அவர்களது உதவியாளர்களையும் கண்டு பிடிக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு நகரின் பல பகுதிகளில் தேடுதல் நடத்தி வருவதாகவும், இத் தேடுதல் வேட்டையின் போது பெருமளவு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவும், சனிக்கிழமை நண்பகலிலும் கொழும்பு நகரத்தில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புகளைத்தொடர்ந்து பாரிய தேடுதல் வேட்டைகள் இடம்பெற்று வருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து தகவல் வெளியிட்டுள்ள இலங்கை வானொலி, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வீடுவீடாக சோதனைகளில் ஈடுபட்டு வருவதாகவும், பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தது.

இதேசமயம் குண்டு வெடிப்பு இடம்பெற்ற வெள்ளிக்கிழமை இரவில் இருந்தே கற்றிவளைப்புகள் இடம்பெறத் தொடங்கியதாகவும் பகுதிகளை பெரும்பாலும் சுற்றிவளைப்பிற்கு உள்ளானதாகவும் அங்குள்ள தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுவதாகவும் அறியமுடிகின்றது.

இதேசமயம் குண்டுகள்தயாரிக்க ஆர். டி. எக்ஸ் என்னும் பிளாஸ்ரிக் வெடிமருந்துபயன்படுத்தப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடங்களுக்கு நேரில் சென்று தடயப் பொருள்களை அரச பகுப்பாய்வாளர் ஆராய்ந்து வருவதாகவும் அவ்வானொலி மேலும் தெரிவித்தது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## மதிவாணன் இறக்கவில்லை தந்தையார் சாட்சியம்

(கொழும்பு)

கல்கிசை கடற்கரையில் ஹோட்டல் ஒன்றின் அருகே குண்டுடன் சென்று இறந்தவர் முன்னர் அறிவிக்கப்பட்டது போல் மகேந்திரன் மதிவாணன் என்பவரல்ல என இவரது தந்தையார் மரண விசாரணையில் ...

கிசை கடற்கரையில் குண்டு வெடிப்பில் காயமடைந்து தற்போது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவரே மதிவாணன் என அவரது தந்தையார் மரண விசாரணையில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்டோர் புள்ளி நீக்குவதற்கு ஆலோசனை?

(யாழ்ப்பாணம்)

போட்டிப் பரீட்சை மூலம் எழுதுவினைஞர் சேவைக்கும் அதனோடிணைந்த சேவைக்கும் ஆள்சேர்ப்பதற்கு பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட்டுவந்த மேலதிக புள்ளிகளை நீக்குவதற்கு பொது நிர்வாக அமைச்சு ஆலோசித்து வருகின்றது.

மேற்படி நியமனத்திற்கு இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கு மேலதிகமாக 25 புள்ளிகள் வழங்கப்பட்டுவந்தது தெரிந்ததே.

இதேவேளை பாதிக்கப்பட்டகுடும்பங்களைச்சேர்ந்தவர்களுக்கான விண்ணப்பபத்திரத்தில் குறிப்பிட்ட பலர் தாம் பாதிக்கப்பட்டதற்கான ஆவணங்களை சரியான முறையில் சமர்ப்பிக்க தவறியமையால் பல வெற்றிடங்கள் நிரப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கென வழங்கப்பட்டுவந்த மேலதிக

(6ஆம் பக்கம் பார்க்க)

## காமினிக்கு உரிய இடம் வழங்குமாறு வற்புறுத்து

(கொழும்பு)

காமினி திசநாயக்காவை கவனிக்க வேண்டியது ஐக்கிய தேசியக் கட்சியின் கடமையாகும். யார் என்ன சொன்னாலும் இணைந்தாட்சி செய்ய வேண்டுமென மேல் மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஐ. தே. க உறுப்பினருமான காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

எனவே இது குறித்து ஜனாதிபதி கூடிய கவனம் செலுத்தி இவருக்கு ஏற்ற பதவியொன்றை மிக விரைவில் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி உத்தரவு

நீண்டகாலசேவை, திறமை என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு பொலிஸ்சேவையில் உள்ளோருக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான உத்தரவை ஜனாதிபதி விஜேதுங்கா பொலிஸ் மா அதிபருக்கு பிறப்பித்துள்ளார்.

நீண்டகாலசேவை ஆற்றிய பின் பதவி உயர்வு இன்றி ஓய்வு பெறும் வயதை கடந்துவிடும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே ஜனாதிபதி இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

### பயிலுநர் ஆசிரியர் நிரந்தரம்

# யாழ். மாவட்டத்தினருக்கு மார்ச் முதலே கிடைக்கும்

(கொழும்பு)

கல்வியமைச்சு எடுத்த தீர்மானத்திற்கமைய நான்கு வருடகால சேவையை பூர்த்தி செய்த பயிலுநர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது சம்பந்தமான அறிவித்தல்கள் பிரதேச கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நான்கு வருட சேவையை பூர்த்தி செய்த சகல பயிலுநர் ஆசிரியர்களின் விபரங்களையும் அனுப்பி வைக்குமாறு மாகாண கல்வியமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. இதற்கான நடவடிக்கையில் பிரதேச பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதன்படி 1990 ஆம் ஆண்டு ஜனவரியில் நியமனம் வழங்கப்பட்டோருக்கு 01.1.1994 இல் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு சம்பள நிலுவையும் வழங்கப்படும். வட கிழக்கின் சீரற்ற நிலைமை காரணமாக 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பயிலுநர் ஆசிரியர் நியமனம் கிடைத்தோர் 1994 மார்ச் மாதத்திலிருந்தே நிரந்தர நியமனம் பெறுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

... கற்றிவளைப்புகள் இடம்பெறத் தொடங்கியதாகவும் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. தமிழர்கள் செறிவாக வாழும் ...

... போல் மகேந்திரன் மதிவாணன் என்பவரல்ல என இவரது தந்தையார் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று கல் ...

# கொழும்பு குண்டு வெடிப்பு புலிகள் விடுத்த எச்சரிக்கை

### - முன்னாள் விமானப்படைத் தளபதி

(கொழும்பு)

கொழும்பு குண்டு வெடிப்புகள் சிறிலங்கா அரசுக்கும் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளே என முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மீது இறுதித் தாக்குதல் நடத்த திட்டமிடும் அரசுக்கு இது எச்சரிக்கை விடுக்கும் முகமாகவே நடாத்தப்பட்டது என அவர் கூறினார்.

# குண்டுவெடிப்பு சூத்திரதாரி கண்டுபிடிக்கப்பட்டார்

### பொலிசார் கூறுகின்றனர்

கொழும்பு குண்டு வெடிப்புகளுக்கு காரணமாக இருந்தவர் என கூறப்படுபவரும் கல்கிசை அருகே இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவருமான நபர் அல்பொன்சோ அன்ரனி அருள்தாஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார் என பொலிஸ் குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவரது இரத்மலானை வீட்டிலிருந்து நான்கு கிலோ குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

# அரசியலில் ஈடுபாடு காட்டும் எண்ணம் எனக்கு இல்லை

### ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறுகிறார்

(கொழும்பு)

தற்போதைய அரசியலில் தீவிர ஈடுபாடு காட்டுவதாக வெளிவந்துள்ள செய்திகளை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா மறுத்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள தொரு அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக தான் முன்னர் மேற்கொண்ட முடிவை இப்போதும் மாற்றிக் கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மற்றும் எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் எனப் பல்வேறு தரப்பையும் சார்ந்தவர்கள் தம்மைச் சந்திக்க விரும்பும்போது தாம் சந்தித்து இருக்கின்ற போதிலும் இத்தகைய சந்திப்புகளின் போது சமகால அரசியல் பிரச்சினைகள் பற்றி பேசப்படுகின்ற போதிலும் கூட தான் அரசியலில் நேரடியாக ஈடுபடவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# விசேட படகுச்சேவை

புதுவருடத்தை முன்னிட்டு இன்று கிளாலி-பூநகரி விசேட படகுச்சேவை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்

... யார் மரண விசாரணையில் ...

(6ஆம் பக்கம் பார்க்க)

... தலைவரும் ஐ. தே. க. உறுப்பினருமான காமினி ஜயவிக் ...

... விடுத்துள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலில் போட்டியிட படை அதிகாரிகள் விருப்பம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் உயர் பாதுகாப்பு படை அதிகாரிகளும் உயர் பொலிஸ் அதிகாரிகளும் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைவர் டி. மு. ஜயரட்ன தெரிவித்துள்ளார். "ஞாயிறு லங்கா தீப" பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டியிலேயே மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார்.

மேற்படி உயர் அதிகாரிகள் பொது ஜன ஐக்கிய முன்னணியின் மூலம் போட்டியிட விரும்புவதாகவும் இதற்கான விண்ணப்பங்கள் தற்போது முன்னணிக்கு கிடைத்துள்ளதாகவும் இது தொடர்பாக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்தவர்களில் பத்து இராணுவ உயர் அதிகாரிகளும், எட்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும், ஏனைய பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்தவர்களில் பன்னிரண்டு பேரும் விண்ணப்பித்துள்ளதாக அவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று மாதகாலம் தொகுதியில் தங்க ஐ. தே. கவினருக்குப் பணிப்பு

### டி. பி. விஜேதுங்கா விடுத்தார்

(கொழும்பு)

மே மாதம் இரண்டாம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு தொகுதிகளில் தங்கியிருந்து ஒவ்வொரு தொகுதியின் அபிவிருத்திக்கும் கடினமாக உழைக்கவேண்டும் என்று ஐ. தே. கவின் தலைவரும் ஜனாதிபதியுமான டி. பி. விஜேதுங்கா அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த திங்களன்று நடைபெற்ற ஐ. தே. கவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், மே மாதம் 2ஆம் திகதி முதல் ஜூலை 31ஆம் திகதி வரை தத்தம் தொகுதிகளில் பிரசார வேலைகளில் முழுமூச்சாக ஈடுபடல் வேண்டும் என்றும், ஜூலை 31ஆம் திகதிக்குப் பின்னர் ஒவ்வொரு தொகுதிக்கும் சுதந்திரமான அமைப்பாளர்கள் அனுப்பப்பட்டு மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கிறதா? தொகுதியைக் குறிப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# விரைவில் ஐ. தே. கட்சி புனர்நிர்மாணம் பெறும்

### - சிறிசேன குரே

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி புனர்நிர்மாணம் செய்யப்பட இருப்பதாக அதன் பொதுச் செயலாளர் சிறிசேன குரே தெரிவித்துள்ளார்.

தென் மாகாணசபை தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியைத்தொடர்ந்து இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் எதிர்வரும் தேர்தல்களில் வெற்றியீட்டும் நோக்குடன் இது மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

மாகாணசபை தேர்தலின்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

கலைக்கிறவுன் 1 மாதம் வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக் குண்டு. "கல்வியாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மாவிட்டபுரம் (7981)

### தேவை

சகலவிதமான வீடியோ செற், ரேப் செற் வகைகள், மைக், கமறா மற்றும் எலெக்ரோனிக் பொருட்களை நியாய விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்புகளுக்கு மின்வளம் இல. 8 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (இ-8988)

### காவேரி சியக்காய்ப்பவுடர்

ஷம் போலைப் போலல்லாது பல் நடவுகளைத் தருவது காவேரி சீயக்காய்ப்பவுடர். சீயக்காய்ப்பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள்: கந்தசாமி அன் சன்ஸ். (7900)

### தவறிவிட்டது

பழைய வடிவமைப்பில் அமைந்த திசையறி கருவியுடன் கூடிய கைக்கடிகாரம் ஒன்று பூநகரி பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாண பதிப்பு அல்லது வன்னிப்பதிப்பு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7996)

### துளிர்

பெப்ரவரி மாத துளிர் வந்துவிட்டது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகிறோம். (7995)

### அறிவியல் நூல்கள்

பத்துவகையான அறிவியல் நூல்கள் விற்பனையாகிறது. விபரங்களுக்கு வசந்தம், மற்றும் துளிர் விற்பனையாளர்களிடம் இது ஒரு அறிவியல் இயக்க வெளியீடு (7991)

### கே. டானியலின் நாவல்கள்

அஞ்சாசோகனங்கள், பஞ்சமர், கானல், தண்ணீர் முதலியன விற்பனையாகிறது வசந்தம் புத்தக நிலையம், 405 அருச்சனா வீதி (புதிய பஸ் நிலையம் முன்) யாழ்ப்பாணம். (7993)

## நான்கு மாத ஊதியம் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

புகையிரத திணைக்கள காவல் ஊழியர்களுக்கான ஊதியப் பணம் திறைசேரியில் எடுத்து வரப்பட உள்ளது.

சுமார் 800 ஊழியர்களுக்கு கடந்த 4 மாதங்களுக்குரிய ஊதியப்பணம் வழங்கப்படும் என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன (நி)(இ)

# அறிவித்தல்

யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகத்தர்கள் மூலம் விநியோகிக்கப் படும் எமது "புத்தூக்கி" குளிர்பானங்களை வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரின் நன்மை கருதி யாழ் குடாநாடு பூராவும் 10-04-1994 தொடக்கம் பின்வரும் விற்பனை விலைகளில் நடைமுறைப்படுத்தப் படும் என்பதனை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்: இந் நடைமுறையினை விநியோகத்தர்களும், சில்லறை வியாபாரிகளும் 10-04-1994 தொடக்கம் நடைமுறைப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்;

| குளிர்பான வகைகள் | மொத்த விற்பனை விலை | சில்லறை விற்பனை விலை |
|---|---|---|
| 300 மி. லீ. கோலா | 11. 00 | 12- 50 |
| 300 மி லீ இஞ்சி | 11- 00 | 12. 50 |
| 300 மி லீ ஏனையவை | 10. 50 | 12- 00 |
| 400 மி லீ இஞ்சி | 13. 00 | 14. 50 |
| 400 மி-லீ ஏனையவை | 12. 50 | 14. 00 |

அனைத்து சில்லறை வியாபாரிகளும் மேற்குறித்த சில்லறை விலைகளுக்கு விற்பனை செய்வதுடன் தங்களின் தொடர்புகளை தங்களுக்கு சேவை செய்யவென அமர்த்தப்பட்ட தங்கள் பகுதி "புத்தூக்கி" மென்பான விநியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

| விநியோகத்தர்கள் | விநியோகப் பகுதி |
|---|---|
| 1) "இனிமை" மென்பான விநியோகத்தர், 54 ஏ புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்; | யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசம் |
| 2) "புத்தூக்கி" மென்பான விநியோகத்தர், ஐ லெவேசன், கே. கே. எஸ். வீதி, இணுவில். | வடமராட்சி, யாழ்ப்பாணம் நல்லூர் தவிர்ந்த வலிகாமப் பிரதேசம். |
| 3) "கலையகம்" மென்பான விநியோகத்தர், பிரதான வீதி, சாவகச்சேரி | தென்மராட்சிப் பிரதேசம் |

## ஆதரவுக்கு நன்றி

பொது முகாமையாளர்
யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கொத்தணி,
இல. 75/1, பலாலி வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

(இ-9075)

# பதவி வெற்றிடம்

பதவி: நிதி முகாமையாளர்.
வயது: 25 - 45 வரை.

சம்பள அளவுத்திட்டம்:

1305 - 60x4 - 75x11 - 2370

(அத்துடன் 314/- + 860/- படிகளுடன் அடிப்படைச்சம்பளத்தில் 80வீதம் ஆகியன வழங்கப் படும்)

குறிப்பு! யாழ் மாவட்டம் முழுவதும் வெளிக்கள வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்கள், விண்ணப்பப்படிவம் ஆகியவற்றிற்கு சமாச காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்

விண்ணப்ப முடிவுத் திகதி: 23 04 1994

தலைவர்
யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாசம்.

(இ-9083)

# 6ம் மாத நினைவஞ்சலி



பிறப்பு: 28-11-63

வீரச்சாவு: 11-11-93

### லெப். கேணல் குணா
(சுந்தரம் விஜயராசா)

அண்ணனின் தம்பி யென்று
அஞ்சாத நெஞ்சம் கொண்டு.
மண்ணினைக் காக்க வந்தான் - குணா
மானத்தைப் போற்றி வந்தான்
விண்ணிலே பேசப் புகுந்து
விதையாகி ஆறு மாதம்
கண்ணிடை மறைந்து விட்டான் எங்கள்
கருத்தினில் நிறைந்து விட்டான்;

கல்வயல்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

(7986)

# மதுரமான இரவு

மகத்தான புடைவைத் தெரிவுகளை மலிவான விலையில் யாழ் வாழ் மக்களுக்கு வழங்கி வசதி செய்யும் "மதுரா பட்டுமகால்" ஸ்தாபனத்தாரின்

## கலை நிகழ்வுகள்

நாதஸ்வர தவில் மேதைகளின்

நகைச்சுவை

நாதஸ்வர தவில் மேதைகளின்
நாதஸ்வர தவில் கச்சேரி

கலை பண்பாட்டுக் கழகத்தினரின்
"சந்தனக்காடு" நாடகம்

நகைச்சுவை
கதம்ப நிகழ்ச்சி

தமிழீழத்தில் பிரபல்யமான இசைக்குழுவினரான
இராஜன் இசைக்குழுவினரின் இன்னிசை விருந்து

## ★ பரிசுக் குலுக்கல் ★

இடம்: இளங்கலைஞர் மன்றம் காலம்: 20-04-1994 மாலை

பிரவேசம்: இலவசம்

குறிப்பு: மதுரா பட்டுமகாலில் 13-04-1994 வரை புடைவைவாங்கும் சிட்டை இலக்கங்கள் யாவும் 20-04 1994 பரிசுக் குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதால் புத்தாண்டுக்கான உங்கள் புடைவைத் தெரிவுகளை மதுரா பட்டு மகாலில் தெரிவாக்குவதன் மூலம் மேலும் சிட்டை (*Bill*)களை சேகரித்து அதிர்ஷ்டசாலியாகும் சந்தர்ப்பத்தை அதிகரித்துக் கொள்ளுங்கள்.

1ஆம் பரிசு தங்கப்பதக்கம் 2ஆம் பரிசு 5000.00
3ஆம் பரிசு 2500.00 பல ஆறுதல் பரிசுகள்

ஓராண்டு காலமாய் ஒய்யார நடைபோடும் மதுரா பட்டு மகாலின் மகிமை
மேலும் மலர வாழ்த்துகின்றோம்

வி. எஸ். பி குறூப்
266A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஞானம்ஸ் றேட்ஸ்
150, 152 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்த்தர்கள்
❖ மலிபன் பிஸ்கட் மனுபக்சரிங் லிமிட்
❖ விற்ரிக் லைன், அசோசியேட்ஸ்
❖ மலிபன் மினரல் வாட்டர்ஸ், லிமிட்

சன் ரான்ஸ்போர்ட்
உரிமையாளர்:- M அரியரத்னம்
399, ஸ்ரான்லிவீதி, 52, பலாலி வீதி
யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம்.

(சி-9086)


## நினைவு கூருகின்றோம்...

**1994-04-11**

1984-ம் ஆண்டு இதேதினத்தில் யாழ் மாவட்டத்தில் பரவலாக சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 04 தமிழர்கள்,

1987-ம் ஆண்டு வலி-குறிஞ்சாத்தீவில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தபோது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

ரஞ்சித் (வன்னியசிங்கம் பாஸ்கரன்-இத்தாவில் -பளை)

கர்ணன் புண்ணியர் வெராசா-கிளைத்தாளையடி, தருமக்கேணி-பளை)

1988-ம் ஆண்டு ஒட்டன்குளத்தில் இந்தியப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

சுனில் (-- கதிரவன் - தமிழகம்)

பாண்டியன் குளத்தில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

லெப்.ரவி (குலசேகரம் செல்வநாயகம்-முள்ளிவாய்க்கால் மேற்கு)

1989-ம் ஆண்டு மட்டுநகரில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட காட்டுமுறிவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1992-ம் ஆண்டு மட்டு-ஊறணிப்பகுதியில் வீதியில் சென்று கொண்டிருந்த தமிழர்கள் மீது சிறிலங்கா ராணுவம் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்,

1993-ம் ஆண்டு மட்டு - போரதீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சயனைப் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

மேகராஜ் (கந்தையா தேவராஜகுலசிங்கம்-கோயில் போரதீவு-மட்டு)

இவர்களை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

தமிழீழ விடுதலைப் புலிகள்

(வ-9084)

# எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகாமையில்)

411/1 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## O/L DAY CLASS

கணிதம்: திரு. B.P. பாஸ்கரன்

விஞ்ஞானம்: திரு. இரா. செல்வவடிவேல்
திரு. J.J. கொலின்ஸ்

சமூகக்கல்வி: திரு K.S முத்துலிங்கம்

தமிழ்-சமயம்: திரு K இராஜலிங்கம்

ஆங்கிலம்: திரு. C சத்தியமூர்த்தி

வர்த்தகம்: திரு விக்கி

ஆரம்பம்

12-04-1994 செவ்வாய் மு.ப 8 மணி

★ கணிதம் - விஞ்ஞானம் கடந்த 18 வருட வினாக்கள் மீட்கப்படும்.

★ கணிதம் மேலதிக வகுப்பு மூலம் அடிப்படையில் இருந்து போதிக்கப்படும்

(சி 9061)

# பெயர் மாற்றம் பற்றிய அறிவித்தல்

இதுவரை காலமும் வீனஸ் தங்க மாளிகை என்ற பெயரால் அழைக்கப் பட்டு வந்த எமது நிறுவனம்,

11 - 4 - 94 இல் இருந்து

## வினோ நகை பூங்கா

எனப் பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்

வினோ நகை பூங்கா
185, கஸ்தூரியார் வீதி, சந்தோஷம் தெரு, யாழ்ப்பாணம்.

(7988)

## வருடாந்த உற்சவம்

(குருநகர்)

யாழ் வண்ணை இறி காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோவில்) தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கள் முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தினமும் மாலை 6 மணிக்கு இரவுத் திருவிழா ஆரம்பமாகும்.

இம்மாதம் 20ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு மஞ்சத்திருவிழாவும், 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், 25ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும், 27ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு பூங்காவனத்திருவிழாவும் நடைபெறும். (81)

## யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

இலங்கை பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப் பட்டப்பாட நெறிகளான

- கலைமாணி B. A.
- வணிகமாணி B. COM.
- விஞ்ஞானமாணி (புள்ளிவிபரவியல்) B. Sc.

க. பொ. த உயர்தரத்தில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி நெறியை மேற்கொள்ளலாம்

### விரிவுரைகள் 16 - 4 - 94 ஆரம்பமாகின்றன

விபரங்களுக்கு:
உதவிப்பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

முக்கியகுறிப்பு :- யாழ்ப்பாணம் பேராதனைப் பல்கலைக் கழகங்களினால் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன இதற்கான விண்ணப்பப்படிவங்களை எம்மிடமிருந்து பெற்று விண்ணப்பிக்கலாம் (சி-9076)

# எடிசன் அக்கடமி

(கொக்குவில் இந்து, குளப்பிட்டிச்சந்தி இடையில்)

27, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்

## O/L DAY CLASS

ஆரம்பம்

12-04-1994 செவ்வாய் மு. ப. 8 மணி

எமது திறமை மிகு ஆசிரியர் குழு

கணிதம்: திரு. B. P. பாஸ்கரன்

விஞ்ஞானம்: திரு. J R. சூரி
திரு J. J. கொலின்ஸ்

சமூகக்கல்வி: திரு. க கோபி

தமிழ் - சமயம்: திரு K. இராஜலிங்கம்

ஆங்கிலம்: திரு C. சத்தியமூர்த்தி

வர்த்தகம்: T. தர்மராஜன்

குறிப்பு

- பாடத்திட்டம் பூர்த்தியாவதுடன் கடந்தகால வினாக்கள் உடன் மீட்கப்படும்.
- கணிதம்- விஞ்ஞானம் கடந்த 18 வருட வினாக்கள் மீட்கப்படும்.
- கணிதம் மேலதிக வகுப்பு மூலம் அடிப்படையில் இருந்து போதிக்கப்படும்.

## நகையகப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 177 B இலக்கத்தில் அமைந்துள்ள "அருணா ஆபரண மாளிகை" என்னும் ஸ்தாபனம் தற்போதைய உரிமையின் கீழ் இன்று (94-04-11) முதல் "வித்யா நகையகம்" என பெயர் மாற்றம் செய்யப்படுகின்றது. இதனை வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

- உரிமையாளர்

(7987)

## நில அளவையாளராவதற்கான பயிற்சி

அரச நில அளவையாளராவதற்கான முன்னோடி நில அளவைப் பயிற்சியை தமிழீழ நில அளவையாளர் ஒருங்கிணைப்புக் கழகம் வழங்கவுள்ளது. இப் பயிற்சியினைப் பெற விரும்பும் ஆண் பெண் இருபாலாரும் 20-04-94-ம் திகதிக்குமுன்னர் கீழ்க்காணும் விலாசத்திற்கு கடிதமூலமோ அல்லது நேரிலோ சேர்ப்பிக்கவும்

மேலதிக விபரங்கட்கு

29.03.94-ல் வெளிவந்த "ஈழநாதம்", "உதயன்" பத்திரிகைகளைப் பார்க்கவும்.

இயக்குநர்
(பயிற்சிப் பிரிவு)
தமிழீழ நில அளவையாளர்
ஒருங்கிணைப்புக் கழகம்

# முக்கிய அறிவித்தல்

## மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதமுடைய தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 31 . 03 . 94இல் வாக்காளர் பட்டியல்

மேற்படி சங்கத்தில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட கிளைக்குழுவினரால் அனுமதிக்கப்பட்ட அங்கத்தவர் பட்டியலிலிருந்து 31-03-1994 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட (1994 ம் ஆண்டு முதலாம் காலாண்டிற்குரியது) வாக்காளர் பட்டியல் கிளைரீதியாக மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள மேற்படி சங்கத்தின் தலைமைக் காரியாலயத்திலும், கீழ்குறிப்பிடப்பட்டுள்ள நிவாரணக் கிளைகளிலும் 11 04. 94 இலிருந்து 10 நாட்களுக்கு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது

இவ்வாக்காளர் பட்டியல்கள் காட்சிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்கிடையில் பின்வருவனவற்றிற்கு எழுத்துமூலம் ஆட்சேபனை தெரிவிக்கலாம்

1. காட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் தனது பெயர் பதிவதற்கு தகுதி பெற்றிருந்தும் எவரேனும் தமது பெயர் சேர்க்கப்படாத பட்சத்தில் தமது பெயரைச் சேர்த்தற்பொருட்டு மேன்முறையீடு செய்யலாம்.
2. இவ்வாக்காளர் பட்டியலில் ஏதேனும் ஒரு பெயர் காணப்படுவது பற்றிய தனது ஆட்சேபனையை தெரிவிக்கலாம்.

இவ்ஆட்சேபனைகளை 20. 04. 94 பி. ப 4 00 மணிக்கு முன்னர்

செயலாளர்
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்.
மருதடி விநாயகர் கோவிலடி,
மானிப்பாய்

என்ற முகவரிக்கு எழுத்து மூலம் அறிவிக்கும்படி இத்தால் கேட்கப்படுகின்றீர்கள்.

| நிவாரணக் கிளையின் இலக்கமும் பெயரும் | வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்ட கிளைகளின் பெயரும் முகவரியும் |
|---|---|
| (அ) இல 4 சித்தங்கேணி<br>இல 15 தாவடி | கிளை இல. 04 வீராங்கொடை<br>கிளை இல. 05 பன்னாலை<br>கிளை இல. 06 விழிசிட்டி<br>கிளை இல. 12 மாவிட்டபுரம்<br>கிளை இல. 13 அரசடிவீதி, மாவிட்டபுரம்<br>கிளை இல. 14 கொல்லங்கலட்டி<br>கிளை இல 35 கலட்டி<br>கிளை இல. 41 கிமாணை |

சமத்தும் மேலதிக கட்டுப்பு மூலம் அடிப்படையில் இருந்து போதிக்கப்படும்;

(இ 9062)

தமிழீழ நில அளவையாளர்
ஒருங்கிணைப்புக் கழகம்

தலைமையகம், இல. 3, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (இ-9077)


உங்கள் ஆடைத் தேவைகளை

விரைவாக பூர்த்தி செய்ய

புதிதாக அமைகிறாள்

# யோகாமணி ஆடை அகம்

(யோகாஸ் ஆடை அகம்)

இன்றைய நாகரிகத்தோடு இணைந்த
இயற்கை எழிலூட்டும் பலவர்ண

★ பட்டாடைகள் ★ ஜவுளித்தினுசுகள்
★ சேட், ஜீன்ஸ் ★ வேட்டி சால்வைகள்

மற்றும்

சிறுவர்களுக்கான ரெடிமேற் அயிட்டங்கள்
புதுப்புது டிசைன்களில் தெரிவு செய்து
நீங்கள் பெற்றிட

மறவாது விரைந்து நாடுங்கள்

## யோகாமணி ஆடை அகம்

16B, பெரியகடை, யாழ்ப்பாணம்.

குறிப்பு: இத்தாபனம் 21-4-1994 தொடக்கம் இல 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

(இ-9019)


கிளை இல. 14 தொல்லைக்கட்டி
கிளை இல 35 கட்டுடை
கிளை இல. 41 இழாலை

ஆ) இல. 13 இணுவில்
இல 03 சீரணி சந்தி

கிளை இல 10 சீமெ. தொழி முன்பாக
கிளை இல 11 நடேஸ்வரா கல்லூரி அருகாமை, காங்கேசன்துறை
கிளை இல. 24 மயிலிட்டி கரை, காங்
கிளை இல. 27 காங்கேசன்துறை
கிளை இல 30 தையிட்டி
கிளை இல. 31 ஊறணி
கிளை இல. 38 மாங்கொல்லை
கிளை இல. 42 திருப்பூர், மயிலிட்டி

இ) இல. 12 உடுவில் ஆலடி நிவா. கிளை
இல. 17 நீர்வேலி

கிளை இல. 09 கீரிமலை, காங்கேசன்துறை
கிளை இல. 29 வீமன்காமம்
கிளை இல. 33 மடத்தடி
கிளை இல. 34 தெல்லி கர. வைத்தியசாலை அருகாமை
கிளை இல. 36 வசந்தபுரம்

ஈ) இல. 16 உருப்பிராய்
இல. 08 மல்லாகம் சந்தி

கிளை இல. 15 வறுத்தலைவிளான்
கிளை இல. 16 கட்டுவன்
கிளை இல. 17 குரும்பசிட்டி
கிளை இல. 37 ஊரங்குணை, கட்டுவன்
கிளை இல 40 குரும்பசிட்டி கிழக்கு

உ) இல 19 புத்தூர்
இல. 06 மாவிட்டபுரம்

கிளை இல 21 பலாலி மேற்கு
கிளை இல 22 பலாலி மத்தி
கிளை இல. 23 பலாலி கிழக்கு
கிளை இல. 32 பலாலி சந்தி

ஊ) இல. 11 சந்தரோடை
இல. 02 துர்க்காபுரம் துணை கிளை

கிளை இல. 01 தெல்லிப்பழை
கிளை இல. 02 துர்க்காபுரம்
கிளை இல. 03 வசாவிளான்
கிளை இல 25 மயிலிட்டி கிழக்கு
கிளை இல. 26 மயிலிட்டி வடக்கு
கிளை இல. 28 பளை வீமன்காமம்

எ) இல. 5 தொட்டிலடி
இல. 14 கோண்டாவில்

கிளை இல. 07 கருகம்பனை
கிளை இல. 08 இளவாலை
கிளை இல 43 சிந்திப்பந்தல்
கிளை இல. 44 மயிலங்கூடல்

ஏ) இல. 18 நவக்கிரி
இல. 02 கட்டுடை

கிளை இல. 18 வசாவிளான்
கிளை இல. 19 ஒட்டகப்புலம்
கிளை இல. 20 வசாவிளான் சந்தி
கிளை இல. 39 குட்டியப்புலம்

நா. தவநாதன்
(தலைவர்)

ஐ. சிங்கராசா
(செயலாளர்)

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்
மருதடி விநாயகர் ஆலய அருகாமை,
மானிப்பாய் (தற்காலிகம்)
10-04-1994

(இ-9080)

1994 டிசெம்பரில் O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கென தயாரிக்கப்பட்ட இப்பாடம் அலகு அலகாக வெளிவரும். இவ்வலகு கற்கும் மாணவர்களுக்கும், தற்கால சோதனைச் சூழ்நிலையில் கல்வி கற்பதற்கு வசதியின்றித் தவிக்கும் மாணவர்களுக்கும் ஆசிரியரின் உதவியின்றி சுயமாகவே கற்றுக் கொள்ளக்கூடிய வகையில் மிகவும் எளிதான முறையில் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

அதே நேரத்தில் கணிதத்தில் திறமை மிக்க மாணவர்களும் தங்கள் திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்வதற்காக மேலுள்ள வினாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

### தொடர்கள்

(அ) கூட்டல் தொடர்

ஓர் எண் தொடர் குறிப்பிட்ட ஓர் எண்ணிக்கையினால் கூட்டப்பட்டுச் செல்லின் அத்தொடர் கூட்டல் தொடர் எனப்படும்.

உதாரணம்:-

(1) 2, 5, 8, 11 ........
(2) 10, 3, -4, -11 ......
(3) 0.6, 1.8, 3.0 ......
(4) $\frac{1}{2}$, 5/6, $1\frac{1}{6}$ ..............

## 1.1 முதலுறுப்பு (a)

கூட்டல் தொடரின் முதலில் வரும் உறுப்பு முதல் உறுப்பு எனப்படும்.

உதாரணம்:-

(1) $\frac{1}{2}$, 6/5, $1\frac{1}{6}$ .........எனும் கூட்டல் தொடரின் முதல் உறுப்பு யாது?

முதல் உறுப்பு $= \frac{1}{2}$

## 1.2 பொதுவித்தியாசம் (d)

கூட்டல் தொடரில் கூட்டப்பட்டுச் செல்லும் தொகையே பொது வித்தியாசம் எனப்படும்.

d = முதலுறுப்பு தவிர்ந்த ஓர் உறுப்பு – அதற்கு முந்திய உறுப்பு

உதாரணம்:-

$\frac{1}{2}$, 5/6, $1\frac{1}{6}$, ... எனும் கூட்டல் தொடரின் பொது வித்தியாசம் யாது?

பொதுவித்தியாசம் = 5/6 − 1/3

$$= \frac{5-2}{6} = \frac{3}{6} = \frac{1}{2}$$

### பயிற்சி (1)

பின்வரும் கூட்டல் தொடர்களின் முதல் உறுப்பையும் பொது வித்தியாசத்தையும் காண்க.

(1) 5, 10, 15, 20 ......
(2) 0.1, 0.3, 0.5, 0.7 ......
(3) -7, 0, 7, 14 ......
(4) 2x, 6x, 10x, 14x ......
(5) 100, 90, 80, 70 ......
(6) (2x+1), (3x+5), (4x+9) ......
(7) (a+x), (a+2x), (a+3x) ............

## 1.3 நியம கூட்டல் தொடர்

a, a+d, a+2d, a+3d, a+4d ........

இங்கு a = முதல் உறுப்பு
d = பொது வித்தியாசம்

## 1.4 கூட்டல் தொடரின் n ம் உறுப்பு

| | |
|---|---|
| 1-ம் உறுப்பு | a |
| 2-ம் உறுப்பு | a+d |
| 3-ம் உறுப்பு | a+2d |
| ......... | ......... |
| ......... | ......... |
| 29-ம் உறுப்பு | = a + 28 d |
| n-ம் உறுப்பு | = a + (n − 1) d |
| n-ம் உறுப்பு | = Tn எனக் கொண்டால் |

$$T_n = a + (n - 1) d$$


த. நித்தியானந்தம்
சரசாலை


உதாரணம்: (1)

20, 25, 30, 35...... எனும் கூட்டல் தொடரின் 29-ம் உறுப்பைக் காண்க.

இங்கு a = 20
d = 25 − 20
= 5
n = 29
T29 = ?

Tn = a + (n − 1) d எனும் வாய்ப்பாட்டைப் பிரயோகிக்க

$$T_n = a + (n-1)d$$
$$T_{29} = 20 + (29 - 1)\,5$$
$$= 20 + 28 \times 5$$
$$= 20 + 140$$
$$= 160$$

∴ 29-ம் உறுப்பு = 160 ஆகும்

உதாரணம் (2)

0.3, 0.6, 0.9 ...... எனும் கூட்டல் தொடரின் 51-ம் உறுப்பைக் காண்க.

இங்கு a = 0.3
d = 0.3
n = 51
T51 = ?

Tn = a + (n − 1) d எனும் வாய்ப்பாட்டைப் பிரயோகிக்க

$$T_n = a + (n - 1) d$$
$$T_{51} = 0.3 + (51 - 1)\,0.3$$

உதாரணம் (3)

1/4, 15/28, 23/28...... எனும் கூட்டல் தொடரின் 6-ம் உறுப்பு யாது?

இங்கு $a = \frac{1}{4}$

$$d = \frac{15}{28} - \frac{1}{4}$$
$$= \frac{15 - 7}{28}$$
$$= \frac{8}{28}$$
$$= \frac{2}{7}$$

n = 6
T6 = ?

Tn = a + (n − 1) d ஐப் பிரயோகிக்க

$$T_6 = \frac{1}{4} + (6-1) \times \frac{2}{7}$$
$$= \frac{1}{4} + 5 \times \frac{2}{7}$$
$$= \frac{1}{4} + \frac{10}{7}$$
$$= \frac{7 + 40}{28}$$
$$= \frac{47}{28}$$
$$= 1\frac{19}{28}$$

6 ஆம் உறுப்பு $1\frac{19}{28}$ ஆகும்.

உதாரணம்:- (4)

-19, -15, -11, ... எனும் கூட்டல் தொடரின் 4 ஆம், 15 ஆம் உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

$$T_n = a + (n-1)d$$
$$T_4 = -19 + (4-1)4$$
$$= -19 + 3 \times 4$$
$$= -19 + 12$$
$$= -7$$

$$T_n = a + (n-1)d$$
$$T_{15} = -19 + (15-1)4$$
$$= -19 + 14 \times 4$$
$$= -19 + 56$$
$$= 37$$

∴ 4ஆம், 15ஆம் உறுப்புக்களின் கூட்டுத்தொகை = -7 + 37
= 30

---


இ. மருதலிங்கம்


பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை தாய்மொழிப் போதனை செயல் வடிவம் பெற்றுள்ள இன்றைய சூழ்நிலையில் தமிழ் மொழிக் கல்வி மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களுக்கும் குறிக்கோள்களுக்கும் எய்தப்படுகின்ற அடைவுகளுக்குமிடையேயுள்ள இடைவெளியை எண்ணிப்பார்க்காமல் இருத்தல் இயலாது.

''பண்பாட்டுணர்வை வளர்ப்பதோடு சமுதாய மாற்றங்களை விரைவு செயலூக்கத்தையும், ஆக்க சிந்தனையையும் வளர்ப்பதற்கு மொழி கருவியாய் அமைதல் வேண்டும்'' என்ற மொழிப்பயன்பாடு பற்றிய தற்காலக் கருத்து தமிழ் மொழிக்கு விதிவிலக்கானதன்று. ஆனால் இன்று தாய்மொழிக்கல்வியின்பெறுமானம் சரியானநோக்கில் கருதப்படாதமை வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்னும் நான்கு துறைகளிலும் படிப்படியாகத் தேர்ச்சிபெறுவதன் மூலம் தமிழை வாழும் மொழியாகக் கற்கவும், சமூகவாழ்வியற் தேவைகளுக்கு பயன்படுத்தவும்தாய்மொழிப்போதனை துணை செய்கிறது. ஆனால் இந்நான்கு துறைகளிலும் எம் மாணவர்களது செயற்படுதிறன் பலமடங்குவிருத்திசெய்யப்படவேண்டியதாக உள்ளது என்பதில் கருத்து முரண்பாடு ஏற்பட இடமில்லை.

இப் பின்னடைவிற்குப் பல காரணங்களை இனங்கண்டு கொள்வது கடினமானதன்று! தாய்மொழிக்கல்வி பரீட்சை நோக்கில் மட்டும் நோக்கப்படுவது.இதில் முதன்மையானது. மாணவர்- பெற்றோர் மட்டும் அன்றி பாடசாலைகளிற்கூட இந்நோக்கே முன்னெடுக்கப்படுகிறது. பரீட்சை பெறுபேறுகள் மட்டுமே அளவீடாகக் கருதப்படுவதன் விளைவு இதுவாகும். பொதுவாக வாசிப்புப் பழக்கத்தை விருத்திசெய்யாமையும் விளக்கத்திற்கேற்ற விடயப் பரப்புக்களை வாசித்து விளக்கம் பெறாமையும் இன்னொருகாரணமாகும். உதாரணமாக க.பொ.த சாதாரணதர இலக்கியப்பாடப்பகுதியில்'கம்பராமாயணக்காட்சிகள்' என்னும் பண்டிதமணியின் கட்டுரைகளில் தெளிவுபெற வேண்டுமாயின் பாரதம்,இராமாயணம், சிலப்பதிகாரம். பெரிய புராணம், பகவத்கீதை போன்ற பல்வேறு நூல்களோடு தொடர்புபட்ட அறிவு ஓரளவேனும் அவசியமானது. பரீட்சை நோக்கில்மட்டுமன்றி பண்டிதமணியினது ஆக்கங்களது ஆழத்தையும் அகலத்தையும் புரிந்துகொண்டு நயப்புணர்வு பெறும் வாழ்வியல் நோக்கிற்கும்துணைபுரியவல்லது ஆயின் பெரும்பாலான மாணவர்கள் இம்முயற்சியில்ஈடுபாடுகொள்வது இல்லை என்பது கசப்பானஉண்மையே ஆசிரியர்கள் அவற்றின் தொடர்புகளை விளக்கி உதவினாலன்றிமாணவர் புரியாத நிலையிலேயே கற்கவேண்டி ஏற்படுகிறது. அத்துடன் பெரியபுராணம், சீறாப்புராணம் போன்ற இலக்கியத்திலுள்ள படலங்களை கற்பிக்குமுன் முழுமையாக முதலில் நோக்கும் தன்மை. அதாவது நூலின் அமைப்பும் தொடர்பும் விளக்குதல் முக்கியத்துவம் பெறாமையும் மனங்கொள்ளப்பட வேண்டியதாகும்.

பாடசாலை, தனிப்பட்ட கல்வி என மாணவரது நேரம் முழுமையும் கழிந்து போக, சோர்வும் இயலாமையும் எஞ்சியுள்ள இன்றையஎம்மாணவ சமுதாயம் வாசிப்பதனால் முழுமை பெற முடியாதுள்ள சூழல் மிகத் துர்ப்பாக்கியமானதே.

மேலும் பாடசாலை மாணவரது தமிழ் மொழிக் கல்விக்கு உதவும் வகையில் அமைந்த உசாத்துணை நூல்களும் அருகியே உள்ளன. பரீட்சை நோக்கில் அமையும் வினாவிடை நூல்களன்றி மேலதிக வாசிப்பிற்கான இலக்கியங்களைவெளியீடுகள்பெருகுவது நூல் வெளியீடுகள் பெரும் சவாலாக மாறியுள்ள இன்றைய சூழலில் எதிர்பார்ப்பதும் இடர்ப்பாடு மிக்கதே.

மொழி கற்பிக்கும் ஆசிரியர் பற்றாக்குறை சகல தரங்களுக்கும் பொதுவான அம்சமாக மாறியுள்ளது. கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடத்துறை சார்ந்த விசேட ஆசிரியர் இன்மையும், பல்கலைக்கழக கலைப்பட்டம் பெற்று ஆசிரிய பதவி பெறுபவர்களில் அநேகர் மொழிப்பாடம் கற்பிப்பதில் காட்டும் தயக்கமும் அத்தோடு தமிழாசிரியர் என்பது சமூக மதிப்பற்றது என்பது போன்ற உணர்வு நிலையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்தோடு பாட போதனையில் கட்புல செவிப்புல சாதனங்கள் முற்றாகப் பயன்படுத்தாத ஒரு துறையாகவும் மொழிகற்பித்தல் அமையும் சூழல் ஆரோக்கியமானதன்று.

தமிழ் மொழிப் பாடபோதனையில் இவ் வகைத் தளர்வுகள் தென்பட்டாலும் அவற்றைத் தவிர்க்கும்முயற்சிகளும் இடம் பெறாமல் இல்லை. பேச்சுக்களை வளர்த்தல், வட்ட மேசைக் கருத்தரங்கு நிகழ்வுகள், நாடக ஆக்கம், நடித்தல் எனும்அம்சங்களுக்கு தமிழ் மொழி பாட வேலைத் திட்டத்தில் பாட வேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளதோடு ஏனைய பாடங்களைப் போல தமிழ் மொழிக்கும் முதன்மை ஆசிரியர்களது பணி விரிவாக்கப்பட்டுள்ளது. ஆயினும் இலக்கை அடைய தொலை தூரம் போக வேண்டியுள்ளது. வழுவற்ற உறுப்பமைந்த மொழி நடையை மாணவர் கைக்கொள்ள அனைத்து ஆசிரியர்களதும் ஒத்துழைப்பு அவசியமானது. பொதுப்பரீட்சைகளில் உறுப்பெழுத்துக்கு தனியான புள்ளி எனும் கருத்தும் வரவேற்கக் கூடியதே. அத்தோடு வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டவும் இலக்கியம், கட்டுரைஆக்கம், கவிதை நயப்பு ஆகியவற்றில் திறன்களைப்பெருக்கவும் ஏற்ற நூல்களை தேர்ந்தெடுத்து வாசகர் வட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்தல் பயனுடையதாகும். மாணவர் ஆக்கங்கள் பாடசாலை மட்டங்களிலும் பிரதேச மட்டங்


(5ஆம் பக்கம் பார்க்க)

## சிந்தனைக்கு

ஆற்றிலே நடக்கும் போது கணுக்காலளவு தண்ணீரிலும் எச்சரிக்கையாகத்தான் இருக்கவேண்டும்;

- தமிழ்ப் பழமொழி;


# ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-04-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05


## டி. பி. விஜேதுங்காவின் முற்றத்தில் வெடித்த குண்டு

கொழும்பில் பதினாலு மணிநேர இடைவெளிக்குள் ஐந்து இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் பாதுகாப்பு வட்டாரங்களுக்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுப்பதில் ஆச்சரியமில்லை. இக் குண்டு வெடிப்பினால் கேந்திர பாதுகாப்பு வலயத்திலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் மிருகக்காட்சிச்சாலை என்பன பாதிக்கப்பட்டுள்ளன.

இக்குண்டு வெடிப்பிற்கு யார் காரணம் என்பது குறித்து விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதும் வழமைபோல விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடத்தியதாக சிறிலங்கா அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இக்குண்டு வெடிப்பிற்கு யார் காரணம் என்பது ஒருபுறம் இருக்க, இக்குண்டு வெடிப்பானது நிகழ்த்தப்பட்ட இடங்களும் காலமும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும், அதன் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் பெரும்சவாலாக அமைந்துள்ளது என்பதில் மட்டும் சந்தேகம் இல்லை.

சுருக்கமாகக் கூறுவதானால் இக்குண்டு வெடிப்பானது சிறிலங்கா அரசின் பிரதான பாதுகாப்பு வலயத்தை உடைத்து விட்டதென்றே கூறலாம். ஏனெனில் குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற பகுதிகள், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாகும். இராணுவ தலைமையகத்திற்கும் விமானப் படைத் தலைமையகத்திற்கும் அருகிலுள்ள தாஜ் சமுத்திரா ஹோட்டலில் ஒரு குண்டு வெடித்துள்ளது; அதேபோன்று குண்டு வெடிப்பு இடம்பெற்ற மற்றொரு இடமான ஓரியன்ற் ஹோட்டல் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வவாசஸ்தலத்திற்கு அருகில் உள்ளது; இதேபோன்று தெகிவளை மிருகக் காட்சிச் சாலையில் வெடித்த குண்டும் பிரதமரின் பிரத்தியேக வாசஸ்தலத்திற்கு அண்மையில் வைக்கப்பட்டதாகும். ஒருவகையில் இக்குண்டு வெடிப்புக்களை டி. பி. விஜேதுங்காவின் முற்றத்தில் வெடித்த குண்டுகள் எனவும் கொள்ளலாம்.

அதாவது குண்டுவெடிப்புக்கள் யாவும் பிரதான பாதுகாப்பு வலயத்தினுள் அல்லது தீவிரகண்காணிப்பிற்குட்பட்ட பகுதியினுள் வைக்கப்பட்டுள்ளன. அத்...

## இயங்காமலுள்ள கிளைகள் இயக்க மக்கள் வங்கி முடிவு?

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இயங்காமலிருக்கும் மூன்று மக்கள் வங்கிக் கிளைகளை மீளச் செயற்பட வைப்பதற்கு யாழ் மக்கள் வங்கி தலைமைக் காரியாலயம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

மூன்று வெவ்வேறு இடங்களில் விரைவில் இது செயற்பட வைக்கப்படும் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

பருத்தித்துறை, சங்கானை, பளை ஆகிய பகுதிகளிலேயே மீளச் செயற்பட வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மடுவில் செயற்படவைக்கப்பட உள்ள மக்கள் வங்கிக் கிளையை அடுத்தே இக் கிளைகள் செயற்படவைக்கப்படும் எனத் தெரிவித்தார் (தி,க)

## குடும்பநலசேவையாளருக்கு யுனிசெவ் உதவி கிடைக்கும்

யாழ் மாநகரசபை எல்லைக்குள் ஐம்பது குடும்பநல சேவையாளர்களுக்கு ஒரு வருடத்திற்குரிய ஊக்குவிப்புப் பணம் வழங்க யுனிசெவ் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது

இப்பணத்தின் ஒருபகுதியை தாம் வழங்குவதாகவும், இன்னொரு பகுதியை யாழ். மாநகரசபை வழங்க வேண்டும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அதன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் குறிப்பிட்ட குடும்ப நல சேவையாளர்கள் நன்மை பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (தி,சி)

## தடையற்ற பொருள்கள் எடுத்துவர நடைமுறை

### யாழ். அரச அதிபர் கோருகிறார்

தடையற்ற பொருள்களை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அனுமதியுடன்மட்டும் வடபகுதிக்கு எடுத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ் அரசாங்க அதிபர் கோரியுள்ளார்.

இப் பொருள்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறும்போதுஇவற்றை வடபகுதிக்கு எடுத்து வருவதில் நீண்ட தாமதம் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக மேற்படி பொருள்களுக்கு இனி பாதுகாப்பு அமைச்சின் ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதி தளர்த்தப்படலாம் என தெரிவிக்கப்பட்டது.

இதனால் அத்தியாவசிய பொருள்கள் வடபகுதிக்கு வந்து சேருவதில் தாமதம் ஏற்படாது என தெரிவிக்கப்பட்டது (தி) (சி)

## கிராமசேவகர் நியமனம் மே மாதம் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் அறிக்கை பெற வேண்டும் என்பதில் இழுபறி நிலையில் இருந்துவந்த கிராம சேவையாளர் நியமனத்திற்கு அரசாங்க அதிபரின் அறிக்கையுடன் நியமனம் வழங்கப்பட உள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

கிராமசேவகர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று நேர்முகத் தேர்வு முடிந்தும் பலகாலமாக பொலிஸ் அறிக்கைபெற்றாலே நியமனம் வழங்கப்படுமென இழுபறி நிலையில் இருந்துவந்த கிராமசேவகர் நியமனம் பின்னர் அமைச்சரவைக்கு விடப்பட்டது தெரிந்ததே.

இதேவேளை இம்முறை மேற்படி நியமனம் தொடர்பாக திருகோணமலையிலுள்ள மாகாணசபை தலைமைக் காரியாலயத்திலிருந்து யாழ் செயலகத்திற்கு ஒரு படிவம் வரவேண்டுமெனவும் அப் படிவம் வந்ததும் அதைப் பூர்த்தி செய்து அனுப்பிய உடன் சம்பந்தப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வருமெனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை இந் நியமனங்கள் அநேகமாக மே. மாதங்களுக்குள் வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார் (ஓ)(தி)

## குழந்தைகள் சேமிப்பிற்கு

## கடன் வழங்க 10லட்ச. ரூபா இலங்கை வங்கி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட இலங்கை வங்கியின் கிளைகள் மூலம், சுய தொழில் கடன்களை வழங்குவதற்கு மேலும் பத்துலட்சம் ரூபா இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயத்தினால்ஒதுக்கப்பட்டிருப்பதாகத்தெரிய வருகின்றது.

யாழ்ப்பாண மாவட்ட முகாமையாளருக்கு கீழ் இயங்கும் எட்டு கிளை நிறுவனங்கள் மூலம் இக் கடன் வழங்கவே இந் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், அண்மையில் இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர் இங்குள்ள நிலையைத் தெளிவாக எடுத்துக் கூறியதை தொடர்ந்து இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதாக மேலும் தெரியவருகிறது.

இதேவேளை தற்போது யாழ் மாவட்ட முகாமையாளருக்கு கீழ் இயங்கி வரும் இலங்கை வங்கி கிளைகள் மூலம் 22 லட்சம் ரூபா சுய தொழில் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதன் மீள் அறவீடு திருப்திகரமாக உள்ளதாகவும் தெரியவருகிறது

யாழ்ப்பாண மாவட்ட இலங்கை வங்கிக் கிளைகள் யாவற்றிற்கும் ஒரே அளவு கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டபோதும்சுன்னாகம் கிளையே ஆகக் கூடுதலான கடன்களை சுமார் ஐந்து இலட்சம் ரூபாவரையில் வழங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது.

சுயதொழில் கடனுக்கான விண்ணப்பம் மாவட்ட அலுவலகத்தில் உடன் பரிசீலனை செய்யப்பட்டு கடன் வழங்கும் கொள்கைக்கு அமைய இருக்கும் விண்ணப்பங்களுக்கு உடனடியாக கடன்களை வழங்க ஏற்பாடு செய்வதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (நி)

## புதியபல்கலைமாணவருக்கு பொது ஆங்கில வகுப்புகள்

பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்கான பொது ஆங்கில வகுப்புகள் எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இதன்பொருட்டு இரு வருடங்களுக்குப் பின் இம்முறை யாழ்ப்பாணத்திலும் 5 ஆங்கிலம் கற்பிக்கும் நிலையங்கள் பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ளன மாணவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை மே மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் நடைபெறும். மாணவர்கள் தமது வதிவிடத்திற்கு அண்மையில் உள்ள நிலையத்தில் தம்மை பதிவு செய்து கொள்ளலாம்.

கொழும்பு தவிர்ந்தஏனைய மாவட்டங்களில் இவ்வகுப்புகளில் 85 சதவீதமான மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். யாழ்ப்பாணத்தில் 100 சத வீதமான மாணவர்கள் இவ் வகுப்புகளில் கலந்து கொள்கின்றனர். கொழும்பில் 65 சதவீதமான மாணவர்களே பங்குபற்றுகின்றனர் என இணைப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## சூழல் சுகாதாரம் பேண பரு. நகரசபை நடவடிக்கை

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள்ளுள்ள சிலகுடும்பங்கள் வீதிகளில் குப்பை கூழங்களை போட்டும் மலசலங்களை கண்ட கண்ட இடங்களில் கழிப்பதும் எமக்கு நாமே தீங்குகளை ஏற்படுத்துகின்ற ஒரு நடவடிக்கை; இதனால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவது மட்டுமல்ல ஆபத்தான நோய்க்கிருமிகளை உற்பத்தி செய்வதற்கு இவை ஒரு காரணியாக இருப்பதாகவும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவது தடுக்கப்பட வேண்டுமென நகரசபை விசேட ஆணையாளரும், செயலாளருமான திரு. க. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் மக்களுக்கு விடும் அறிவிப்பில் தினமும் கிராமக்கோட்டடியில்இருந்து பருத்தித்துறை துறைமுகம் வரையில் வீதிகள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன, அதன் போது தங்கள் வீட்டுக் குப்பைகளை அத்தொழிலாளிகளிடம் கொடுத்து அப்புறப் படுத்த முடியும் வீதிகளை துப்புரவு செய்த பின்னர் வீதிகளில் குப்பைகளை...

...க்கால்களில் மலசலம் கழிப்பது தவிர்க்கப்பட வேண்டும் இப் பகுதியில் உள்ளோர் வீடுகளில் மலசல கூடங்கள் இருந்தும் இவ்வாறு செய்வது சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துவது மட்டுமல்ல, எமது தொழிலாளிகளுக்கும் பெரும் இடையூறை உண்டு பண்ணுகிறது.

ஆகவே போதிய தொழிலாளிகள் மற்றும் வசதிகள் மருந்துகள் இல்லாதஇந்நிலையில் இதனை செய்வதை விடுத்து மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் மேலும் அறிவித்துள்ளார், (யோ)

## இன்றைய நிகழ்வுகள்

விழிப்புணர்வுமிழந்தோர் இல்ல அபிவிருத்தி நிதிய ஆங்குரார்ப்பணக்கூட்டம் இன்று பிற்பகல் மூன்று மணியளவில் உடுவில் சுவாமி ஞானப்பிரகாசர் வீதியிலுள்ள சமூக மண்டபத்தில் நடைபெறவுள்ளது இந் நிகழ்வில் ஜெகத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்து கொண்டு சிறப்பி...

## இல்ல விளையாட்டு

(நல்லூர்)

யாழ் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல தடகளப் போட்டி இன்று பி.ப. 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் வை. குணசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விளையாட்டுப் போட்டியில் நாதஸ்வர வித்துவான் சோ. செ. சிதம்பரநாதனின் நாதஸ்வர இசையில் உடற்பயிற்சி நிகழ்ச்சிகள் சில நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## புத்தகங்கள் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்களை வாசிகசாலைக்கென கொழும்பில் கொள்வனவு செய்துள்ளது.

மருத்துவ துறை மாணவர்களுக்கு பயன்படக் கூடிய புத்தகங்களுடன் பல தமிழ்ப் புத்தகங்களும் இவற்றில் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை 'ஏசியா பவுண்டேசனால் யாழ் மாநகர சபைக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப் புத்தகங்கள் அனைத்தும் ஒரு மாதகாலத்தில் கப்பல் மூலம் வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (தி,கி)

## 100 பை சீமெந்து

பிற்குட்பட்ட பகுதியினுள் வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு ஒரே நேரத்தில் இல்லாமல் பல கணிநேர இடைவெளியில் குண்டுகள் வெடித்தமையானது பாதுகாப்பு வட்டாரங்கள் உசார் நிலை அடைந்த பின்பும் தாக்குதல் நடத்தப்பட முடியும் என்பதைக் காட்டுவதாகவுள்ளது. அதாவது, சிறிலங்காவின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் நிறைய ஓட்டைகள் இருப்பதையுமே காட்டுகின்றது.

இதேவேளை இக்குண்டு வெடிப்பின் பிரதான நோக்கம் உயிரழிவை ஏற்படுத்துவதல்ல என்பதோடு, பொருளாதார நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு எச்சரிக்கை நடவடிக்கை போன்றே கொள்ள வேண்டியுள்ளது ஏனெனில் குண்டு வைக்கப்பட்ட இடங்கள் யாவும் முக்கிய மையங்கள் ஆயினும் உயிரிழப்புக்கள் ஏற்படுவதை தடுக்கும் நோக்கில் சனநெரிசல் அற்ற வேளையில் அல்லது சனநெரிசல் அற்ற பகுதிகளில் குண்டுகள் வைக்கப்பட்டுள்ளது போலத் தெரிகின்றது.

ஆனால் பொருளாதார இலக்கு என்பது தெளிவாகத் தெரிவதற்குக் காரணம் வெடிக்க வைக்கப்பட்ட குண்டுகள் யாவும் இன்று சிறிலங்கா அரசிற்கு பெரும் அந்நியச் செலாவணியைத் தேடிக் கொடுக்கும் உல்லாசப் பயணிகள் துறையுடன் நெருக்கமான தொடர்பு கொண்ட பகுதிகள் ஆகும். அதாவது உல்லாசப் பயணிகளின் தங்குமிடமும், அவர்கள் பிரதானமாகச் செல்லும் விருந்தக் காட்சிச்சாலையும் ஆகும்.

இந்த வகையில் நோக்கும் போது இக்குண்டு வெடிப்புக்கள் சிறிலங்கா அரசிற்கு எச்சரிக்கை செய்யும் முகமாக நடத்தப்பட்டவை என்றே கொள்ள முடியும். ஏனெனில், பாதுகாப்பு வலயத்தை உடைத்து கேந்திர நிலையங்களில் தாக்குதல் நடத்தப்பட்ட போதும், உயிர்களுக்குப் பெரும் சேதம் விளைவிக்காமல் பொருளாதார இலக்குகள் மீது குறி வைத்துத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்பது தெளிவு.

இந்நிலையில் டி.பி. விஜேதுங்கா அரசாங்கம் இக்குண்டு வெடிப்பினால் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சரியாக மதிப்பீடு செய்வதோடு குண்டு வெடிப்பிற்கான காரணத்தை அறிந்து அதற்கான பரிகாரத்திலும் ஈடுபட வேண்டும். அல்லது போனால் இக்குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்கள் சிறிலங்காவின் பாதுகாப்பு மையம் வரையில் தாக்குதலை நடத்தினாலும் ஆச்சரியம் எதுவும் இருக்காது.

## புதிய கணக்கு அறிமுகம்

### - மக்கள் வங்கி நடவடிக்கை

குழந்தைகளுக்கான புதிய சேமிப்பு வைப்பு நிதிக் கணக்கு ஒன்று மக்கள் வங்கியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

புத்தாண்டில் இவ் வைப்பு நிதிக்கணக்கு ஆரம்பிக்கப்படும் என்று மக்கள் வங்கியின் யாழ் தலைமைக்காரியாலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குழந்தைகள் சேமிப்பு உண்டியல் என்ற இந்த புதிய வைப்புக்கணக்கில் குழந்தைகளுக்கு வங்கியால் உண்டியல்கள் வழங்கப்பட்டு அவற்றில் சேமிக்கப்படும் பணம், வைப்பிலிடப்படும் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்,

இதற்காக கொழும்பிலிருந்து ஆயிரத்துஐந்நூறு உண்டியல்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ் குடாநாட்டில் இந்த உண்டியல்களின் தொகை போதாமையினால் மேலும் பல எடுத்து வருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

குழந்தைகள் சேமிக்கும் பணம் ஒவ்வொரு முறையும் வைப்பிலிடப்பட்டு புதிய உண்டியல்கள் வழங்கப்படும்

இப்புதிய வைப்பு கணக்கு மூலம் குழந்தைகளின் சேமிப்பு பழக்கம் ஊக்குவிக்கப்படும் என்று அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார் (தி) (உ)

## குளம், கால்வாய் திருத்த 26 லட்ச ரூபா கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

குளங்கள், கால்வாய்களைத் திருத்தி அமைப்பதற்கும், நீர் வழங்கல் சேவையை சீரமைப்பதற்கு 26 இலட்சம் ரூபா யாழ் மாநகர சபைக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

விரைவில் இப்பணம் புனர்நிர்மாண அமைச்சினால் மாகாணசபை ஊடாக அனுப்பி வைக்கப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. தி) (தி)

## ஐ.தே.க. அரசின்மீது வழக்கு பெற்றோர் நடவடிக்கை

(கொழும்பு)

தென்னிலங்கையில் காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராய்ந்து அதுபற்றிய தகவல்களை வழங்குவதில் அரசாங்கம் அக்கறை காட்டாது இருந்தால் ஐ.தே.க விற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப் போவதாக காணாமற் போனவர்கள் பெற்றோர்பிள்ளைகளின் அமைப்பு தெரிவித்துள்ளது.

இவ் அமைப்பு மேலும் தெரிவிக்கையில், ஜே. வி. பி. காலங்களின்போது சுமார் 60,000 பேருக்கு என்ன நடந்தது என்பது இன்று வரை தெரியாமலேயே இருக்கின்றது. இதனைக் கண்டறிய விசாரணை நடத்துமாறு அரசாங்கத்திடம் பல தடவைகளில் நேரடியாகவும், சர்வதேச நிறுவனங்கள் மூலமும் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதும் அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் மேற்கொண்டதாக இல்லை. எனவேதான் வழக்கு தாக்கல் செய்வது பற்றி இவ் அமைப்பு முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தது.

களை துப்புரவு செய்த பின்னர் வீதிகளில் குப்பைகளை கண்டபடி வீசுவது வருத்தத்திற்குரிய விடயம்.

இதே போன்று பத்திரகாளி ஒழுங்கை வாய்க்கால் சந்தை மேற்கு ஒழுங்கை வாய்க்கால் பனைக்கட்டை ஒழுங்கைவாய்

## தமிழ்மொழிப்

களிலும் கையெழுத்துப் பிரதியாகவேனும் வெளியிடலாம். மன்றங்கள்- செயற்பாடுகளும் இதில் குறிப்பிடத் தக்கதாகும். இவை வெற்றி பெற அர்ப்பணிப்பும் செயலூக்கமும் உள்ள வழிகாட்டல் இன்றியமையாததாகும் வணிகத் துறை சார்ந்த வெளியீடுகள் பாடசாலை மட்டத்தில் நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாகப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் தமிழ் மொழிவிருத்திக்கும்- பண்பாட்டுப் பாரம்பரிய உணர்விற்கும் ஏற்ற வகையில் வெளியீட்டு முயற்சி முன்னெடுக்கப்படாமை குறைபாடெனவே கொள்ள வேண்டும்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரது தூய தமிழ் சொல்லாக்கல்- பயன்படுத்தல் மற்றும் நூல் வெளியீட்டு முன்னெடுப்புக்களும், தமிழறிஞர்களது முயற்சியாலும் உணர்வாலும் புத்துயிர் பெற்றுவரும் பண்டித வகுப்புக்களும் அதையொத்த செயல் முறைகளும் போற்றப்படுவதற்கு மட்டுமல்லாது கைக்கொண்டு வளர்த்து வளம் பெறத்தக்கவை என்பதையும் உணர்தல் எம் வரலாற்றுக் கடமையாகிறது.

மொழி உணர்வும் பண்பாட்டுயர்வும் இன்றைய போராட்ட வடிவங்களுக்கு உந்து சக்தியாக உள்ள இக்காலப் பகுதியை எம் பிள்ளைகளது மொழி வளர்ச்சி மேம்பாட்டுக்கும் பயனுறுதி பெறச்செய்தல் இதில் ஆர்வமுள்ள அனைவரின் கடமையாகும்.

கொண்டு நிதியத்தை ஆரம்பித்துவைக்க இருக்கிறார்.

ஃ ஃ ஃ

(வடமராட்சி)

பருத்தித்துறை கோட்டத்தில் 15, 17, 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி இன்று பருத்தித்துறை பெண்கள் உயர் கல்லூரியில் பிற்பகல் நடைபெறும். (வே)

## புலிகளின் குரல்

## நிகழ்ச்சி நிரல்

1994-04-11 திங்கள் இரவு

8 01ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "தமிழர்கள் போற்றும் தமிழன்னை பூபதி"

8 10ற்கு - தாயகப் பாடல்கள்

8.30ற்கு - செய்திகள்

8.40ற்கு - தரிசனம்

1994-4 12 - செவ்வாய் காலை

7 02ற்கு -மாவீரவணக்கம்

7 15ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "அமைதியின் மறுபக்கம்"

7 25ற்கு - இன்றைய தாரகை

7.45ற்கு - செய்திகள்

7-50ற்கு-பத்திரிகைச் செய்திகள்

7 55ற்கு - தாயகப் பாடல்கள்

## எடுத்து வரப்படும்

(யாழ்ப்பாணம்)

குருநகர், நாவற்குழி பகுதிகளில் உள்ள பழுதடைந்த மலசல குழிகளை புனரமைப்பதற்கு 100 பை சீமெந்து கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட உள்ளது

யாழ், மாநகரசபையினால் குருநகர் பகுதியில் பழுதடைந்துள்ள மல, சல குழிகளை திருத்துவதற்கு 40 பை சீமெந்தும், நாவற்குழி அகதி முகாமிலுள்ள மலசல கூடங்களை திருத்துவதற்கு 60 பை சீமெந்தும் உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் 800 பீப்பாதாரும், மலத்தியோனும் எடுத்துவருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது! (தி,செ)

## தி. மு. க. கொடி பயன் படுத்த தடை

(சென்னை)

வை. கோபாலசாமியோ அல்லது அவர்களது ஆதரவாளர்களோ மாநாடுகள், கூட்டங்கள் அல்லது வேறு எந்த இடத்திலும் தி.மு.க கொடியை பயன்படுத்த சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

தி. மு க, பொதுச்செயலர் அன்பழகன் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிமன்றம் அன்பழகன் குறிப்பிட்ட வை. கோபாலசாமி உட்பட 11 பேரும் தி.மு.க. பெயரையோ கொடியையோ பயன்படுத்த முடியாது என தீர்ப்பு அளித்தது.

# தோல்வியிலிருந்து காத்துகொள்ளவே ஐ. தே. க. எம்மை நாடுகின்றது

## அமைச்சர் தொண்டமான் கூறுகிறார்

(கொழும்பு)

தம்மைத் தோல்வியிலிருந்து காப்பாற்றிக் கொள்ளவே ஐக்கிய தேசியக் கட்சி எம்மை நாடுகிறது, என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தென்மாகாணசபை தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து கட்சியைத் தோல்வியிலிருந்து மீட்கும் நோக்கத்துடன் அக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் என்னுடன் பேச்சுவார்த்தைக்கு வருகின்றனர்.

ஆனால் எந்தக் கட்டத்திலும் நாம் எமது அடிப்படைக் கொள்கையை விட்டுக் கொடுக்க மாட்டோம். அவை நிறைவேற்றப்பட்டால் மட்டுமே ஐ. தே. கவிற்கு ஒத்துழைப்போம் அதில் மாற்றம் இல்லை என மேலும் அவர் கூறினார்.


உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

10 - 04 - 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்-1612

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-4450, 26-9495, 26-9186, 41-9876, 24-0207, 26-3654, 41-9355, 24-4491, 27-5187, 42-1046, 40-1617, 42-8316, 42-3726, 26-8430, 43-916, 27-9105, 28-6263, 40-5216, 26-5113.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-0488, 26-5157, 26-0507, 26-4058, 27-6415, 24-9773, 26 0649, 24 4701, 26-8497, 42-9326.



ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி நிதிக்கான

"ராசி சில்க்ஸ்"

ஆதரவில் மின்னொளியில் மிளிரப்போகும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி - 1994

இடம்: பரியோவான் கல்லூரி மைதானம்

காலம்:- 11 - 04 - 1994

நேரம்:- பி. ப. 7.00 மணி

பிரதம விருந்தினர்:- திரு. த. அருணகிரிராஜா (உதவிக் கல்விப்பணிப்பாளர், உடற்கல்வி-கல்வி வலயம்)

சிறப்பு விருந்தினர்:- திரு. சிற்சபேசன் (தலைவர் யாழ். வணிகர் கழகம்)

திரு க. அன்னலிங்கம் (செயலாளர் யாழ். வணிகர் கழகம்)

பங்குபெறும் அணிகள்:

(1) திருமலை நட்சேத்திரம் விளையாட்டுக் கழகம் எதிர் சென்மேரீஸ் விளையாட்டுக் கழகம்.

(2) விநாயகர் விளையாட்டுக் கழகம் எதிர் டயமன்ஸ் விளையாட்டுக் கழகம்

பிரவேசம் ரூபா 25.00

★ பந்து விளையாட்டை ரசிப்பதுடன் சிறகிழந்த இனிய சிறார்களுக்கும் உதவுங்கள்

(சி-9041)


## வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் கடந்த பதினேழு வருடங்களாக மெய்யியல்துறை விரிவுரையாளராக கடமையாற்றி வரும் உயர்திரு. வே. யுகபாலசிங்கம் அவர் [illegible]

## புத்தாண்டு தின போட்டிகள்

தமிழ்ப் புத்தாண்டு தினத்தை ஒட்டி உடுவில் பிரதேசச் செயலகத்தால் நடாத்தப்படும் உடுவில் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியும் எல்லோருக்குமான கவிதை, நாட்டார் பாடல் போட்டிகள் இன்று காலை 10.00 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும் கரப்பந்தாட்டம், தாச்சி, கயிறிழுத்தல் போட்டிகள், நாளை செவ்வாய் பி. ப. 3.00 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும் நடைபெறும். விளையாட்டுப் போட்டிகளில் 11 கழகங்கள் பங்குபற்றுகின்றன இறுதிப் போட்டிகள் 14 ந் திகதி புதுவருடத் தினத்தன்று நடைபெறும்.

## சம்பள கொடுப்பனவு

பலாலி ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்தவர்களுக்குரிய சித்திரை மாதச் சம்பளம் இன்று வழங்கப்படவுள்ளதாக கலாசாலை அதிபர் பணிமனையிலிருந்து அறியப்படுகின்றது.

## அரசியலில்

நான் எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டிருக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ள அவர் தொண்டமானை சந்தித்துப் பேசியது உண்மையே ஆயினும் அரசாங்கத்தையோ அல்லது வேறு எவரையுமோ ஆதரிக்கும்படி தான் கேட்டுக் கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார்.

## புதிய உயர்

# ஊழியருக்கு முழுச்சம்பளம் மாகாணசபை இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உள்ளூராட்சி ஊழியர்களின் சம்பளத்தை முழு அளவில் வழங்க வடக்கு-கிழக்கு மாகாணசபையினால் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கொழும்புசென்று மாகாணசபையுடன் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட ஊழியர்களுக்கான சம்பளத்தை முழு அளவில் வழங்குவது பற்றி பேச்சுவார்த்தை நடத்தியிருந்த யாழ். மாநகரசபை ஆணையாளர் நேற்று யாழ். திரும்பினார்.

அவர் எமது செய்தியாளரிடம் இதுசம்பந்தமாக தெரிவிக்கையில், நிர்வகிக்கக் கூடிய அளவிற்கு சம்பளம் வழங்குவதில் முன்னேற்றம் கண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இதற்கு முன்பு வடக்கு-கிழக்கு மாகாணசபை 60 வீதமும், யாழ். மாநகரசபை ஒரு பகுதியையும் சம்பளத்தை வழங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (தி), (ஸ)

# யாழ். நகரசுகாதாரபிரிவுக்கு 20 லட்சம் ரூபா மருந்துகள்

## யுனிசெவ் அனுப்புகின்றது

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனத்தினால் யாழ் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கென 20 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட உள்ளன.

அவசர உதவித்திட்டத்தின் கீழ் இப்பொருள்களை யுனிசெவ் நிறுவனம் இம்மாத கடைசிப் பகுதியில் அனுப்பி வைக்க இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டிலிருந்துவிமான மூலம் தருவிக்கப்படும் இப்பொருள்கள் கப்பல் மூலம் யாழ் வந்து சேரும்.

யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் வழங்கப்பட்ட பட்டியலின் அடிப்படையில் மேற்படி மருந்துப் பொருள்கள் அனுப்பிவைக்கப்படும் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார். அத்தியாவசிய தேவைகளுக்கு இந்தப் பொருள்கள் பெரிதும் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அம்புலன்ஸ், தண்ணீர்த் தாங்கி வாகனம் மற்றும் கழிவகற்றும் இயந்திரம் ஆகியவையும் யாழ். மாநகர சபைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை யுனிசெவ் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. (தி, சி)

# இலங்கைத் தமிழ் அகதிகளை நாடு திரும்புமாறு விளம்பரம்

(சென்னை)

தமிழ்நாட்டில் அகதிமுகாம்களுக்கு வெளியே வாழும் இலங்கை அகதிகள் தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்துள்ள இலவச பயண ஏற்பாட்டை பயன்படுத்தி தாயகத்திற்கு திரும்பும்படி தமிழக அரசால் கோரப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் விதிக்கொள்ளைகளுக்கு காரணம் இலங்கை அகதிகளே என சட்டப் பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்ததை அடுத்து தமிழக தலைமைச் செயலரினால் தமிழக தினசரிகளில் விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

முகாம்களுக்கு வெளியே உள்ள அகதிகளை தமது தாயகம் திரும்பும்படி இதில் கோரப்பட்டுள்ளது: 'இலங்கை தமிழ் அகதிகளுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு' என்ற தலைப்பில் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

தாயகம் திரும்ப விரும்புபவர்கள் மே 10ஆம் திகதிக்குள் தமது பெயர்களை பதிவு செய்யவேண்டும். இவர்களை கப்பல்மூலம் தமிழக அரசு இலவசமாக அனுப்பிவைக்கும் என இந்த விளம்பரம் கூறுகிறது.

## கட்டுநிதி கிடைத்தது

யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கு இம் மாத சம்பளத்தை வழங்குவதற்கான கட்டுநிதி யாழ் கல்வித்திணைக்களத்துக்கு கிடைத்துள்ளதாக யாழ் கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது. ஆனால் இதுவரை எக் கோட்டக்கல்வி அலுவலகங்களும் தமக்கு கட்டுநிதியை வழங்குமாறு கோரும் விண்ணப்பங்களை யாழ் கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கவில்லை எனவும் யாழ் கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேசமயம் யாழ் கல்வித்திணைக்களத்திலும் கோட்டக் கல்வி அலுவலகங்களிலும் கடமை புரியும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் இம் மாதச்சம்பளம் 7-ம்திகதியே வழங்கப்பட்டுள்ளதாகவும் யாழ் கல்வித்திணைக்கள கணக்குக் கிளை தெரிவித்துள்ளது. (17)

## தேர்தலில்

தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில் நாட் [illegible]

## விரைவில்

தோல்வியை ஆராயும் பொருட்டு அமைக்கப்பட்ட கமிட்டி தனது அறிக்கையை இன்னும் இரு வாரங்களில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவித்த குறைபாடுகளை சீர்செய்யும் வகையில் கட்சி புனர்நிர்மாணம் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

## கொழும்பில்

இதேவேளை கொழும்பில் நேற்று முதல் பொலிசாரும் பாதுகாப்புப் படைகளும் சட்டம் ஒழுங்கை பேணும் வகையில் நகரின் முக்கிய பகுதிகளில் கடமையிலீடுபட்டுள்ளனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு பிரதிப்பொலிஸ் மா அதிபர் ஏ. எல். செனிவிரட்னவின் பணிப்பையடுத்து இரவு நேர பொலிஸ் ரோந்தும் அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## காமினி

காமினி மூலம் நாட்டுக்கும் கட்சிக்கும் கிடைக்க வேண்டிய சேவை அளப்பரியது என்றும் எனவே ஒரு சிறந்த நோக்கத்திற்காகவே அவர் எம்முடன் இணைந்துள்ளார் என்றும் எனவே ஏனையவர்களின் விசமத்தனமான பேச்சைக் கேட்காது காமினிக்கு உரிய இடம் வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

## தபால்கள் இறக்கப்பட்டன

(வடமராட்சி)

'கோமாரி' கப்பலில் எடுத்து வரப்பட்ட யாழ். குடாத் தபால் பொதிகள் நேற்று கப்பலில் இருந்து இறக்கப்பட்டன. (யோ)

## குண்டு வெடிப்பில் சிப்பாய் பலி

கனேமுல்ல அதிரடிப்படை முகாமில் கடந்த வாரம் மாலை இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தின் போது விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு இராணுவ சிப்பாய்களில் ஒருவர் பலியானார். மற்றையவர் படுகாயமடைந்தார்.

இராணுவ சேவையிலிருந்து அறிவிக்காமல் தப்பியோடிய குற்றத்திற்காக இவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்கள் என்றும் குண்டு வெடிப்பிற்கான காரணம் இன்னும் தெரியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பாதிக்கப்பட்டோர்

புள்ளியான 25 புள்ளியை நீக்கி எல்லா விண்ணப்பதாரிகளும் சமமாக கருதப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட உள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

## உணவு முத்திரை எடுத்துவர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய உணவு முத்திரை விரைவில் எடுத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து இதை விரைவில் எடுத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (தி, ஸ)

## விமானம் நோட்டம்

ஸ்ரீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான புக்காரா விமானம் ஒன்று நேற்று தென்மராட்சிப் பகுதியை சுற்றி நோட்டமிட்டது.

காலை 9. மணியளவில் ஆனையிறவுப் பக்கமாக இருந்து வந்து மேற்படி விமானமே இவ்வாறு சுற்றி நோட்டமிட்டது. இதனால் சாவகச்சேரி சந்தையில் நின்ற மக்கள் சிதறி ஓடி பாதுகாப்பைத் தேடினர்.

இதே சமயம் வல்வெட்டித்துறை குடியிருப்புக்கள் மீது குண்டு வீச்சு விமானம் ஒன்று அரை மணி நேரமாக இடைவிடாது வட்டமிட்டது. இப்பகுதிக்கு நேற்றுக்காலை 7.45 மணிக்கு வந்த "அவ்ரோ" விமானம் 8 20 மணிவரை தொடர்ச்சியாக வட்டமிட்டது. (86, யோ)

மரண அறிவித்தல்

எமது கல்லூரியில் கடந்த பதினேழு வருடங்களாக மெய்யியல்துறை விரிவுரையாளராக கடமையாற்றி வரும் உயர்திரு. வே. யுகபாலசிங்கம் அவர்கள் மேனாட்டுத்தேய தத்துவத்துறையில் முதுகலைமாணி (M.A.) பட்டத்தைப் பெற்றுக்கொண்டமையையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். இவரது கல்விப் பணிகள் மேலும் சிறக்க எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இயக்குநர்,
விரிவுரையாளர்கள்
மாணவர்கள்
பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1, பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-9087)

## தவறிவிட்டது

10 04 94 அதிகாலை சாவகச்சேரியிலிருந்து முகமாலையூடாக யாழ்ப்பாணம் வந்த முச்சக்கர மோட்டார் வண்டியிலிருந்து நற்சான்றிதழ்கள், மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்பு நிற பை ஒன்று கொடிகாமத்திற்கிடையில் தவறிவிட்டது.

எனவே இதைக்கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 495, அரச்சுனா வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள எமது முச்சக்கர மோட்டார் வண்டிக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

செயலாளர்
முச்சக்கர மோட்டார் வண்டிச் சேவைச் சங்கம்
யாழ்ப்பாணம்

(7991)

## அறிவித்தல்

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய திருவிழாக்கால கடைகள் வழங்குதல் 12.04.94 (செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

-நிர்வாகம்

(7999)

## புதிய உயர் கல்லூரி

(ஆரியகுளம் சந்தி)
யாழ்ப்பாணம்.

# OL

DAY CLASSES
பகல் நேர வகுப்புக்கள்
ஆரம்பம்:
11. 04. 94 திங்கள்
காலை 8. 00 மணி
(வகுப்புக்கள் 4 நாட்கள் நடைபெறும்)

(இ-9083)

தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில் நாட்டுக்கு ஒரு நல்ல சேவையை இவர்கள் செய்ய முற்பட்ட போதும் அரசியல் காரணிகளினால் இது செய்ய முடியாது போனதால் தாம் அரசியலில் ஈடுபட்டு அச்சேவையை செய்ய விரும்புவதாக குறிப்பிட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார்.

### மதிவாணன்

சாட்சியம் அளிக்கும்போது தெரிவித்தார்.

கனடாவிலிருந்து ஒரு வருடத்திற்கு முன்பு கொழும்பு திரும்பிய அருள்தாஸ் என்ற இளைஞர் தனது மகன் மதிவாணனின் நண்பன் என்றும் இறந்தவர் அருள்தாஸாக இருக்கலாம் என்றும் அவர் மேலும் சாட்சியமளித்தார்.

விக்கு உரிய இடம் வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

### மூன்று

பிட்ட உறுப்பினரின் செல்வாக்கு என்ன? என்பது பற்றி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் இந்த மதிப்பீடுகளின் அடிப்படையிலேயே எதிர்கால தேர்தல்களில் போட்டியிடும் சந்தர்ப்பம் வழங்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் தொகுதிகளுக்கு தாமதமின்றி சென்று மக்களைச் சந்தித்து தேர்தல் அலுவலகங்களை அமைக்கும் படியும், தமது பணிப்புரைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தும்படியும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டாரென விடயமறிந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.


புலரும் புதுவருடத்தில் புத்தாடை அணிந்து
பொலிவுடன் பவனி வாருங்கள்!

அழைக்கிறது

சுகுணாஸ் புடவை மாளிகை
29, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

கிருஷிகா ஆடை அகம்
69A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட

- முகூர்த்தப் பட்டுப்புடவைகள்
- கூறைச்சேலைகள் மற்றும்
- காஞ்சிபுரம்
- பட்டுவேட்டி, சால்வைகள்
- றெடிமெட் ஆடைகள்

யாவையும் வசதியாக ஒரே இடத்தில்
எண்ணம் போல் தெரிந்து பெற்றிடலாம்

(இ-9085)


# மரண அறிவித்தல்கள்

## இராமநாதன் மீனாட்சிப்பிள்ளை

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் வார்கலட்டியை வதிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் மீனாட்சிப்பிள்ளை 10-4-94 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இளையதம்பி இராமநாதன் (சந்தை விதானை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இளையதம்பி (முகாமையாளர், வலிகாமம் பரிபாலனசபை), காலஞ்சென்ற திருநாவுக்கரசு (P.W.D. ஓவசியர்), திருமதி சி. சிவபூரணம், திருமதி ப. அன்னபூரணம் (மலேசியா) சிவானந்தன் (பனங்கட்டி) (ப. நோ. கூ. சங்கம், சுன்னாகம்), திருமதி ந. ஆனந்ததேவி (மலேசியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் 11-04-94 (இன்று) காலை 9 மணியளவில் சுன்னாகம் இல்லத்தில் நடைபெற்று சுன்னாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. சிவானந்தன்
(மகன்)

(7992)

## அப்புக்குட்டி தம்பிராசா

(8ஆம் வட்டாரம் புங்குடுதீவு)

அப்புக்குட்டி தம்பிராசா புங்குடுதீவில் காலமாகிவிட்டார். இவர் நல்லதங்கத்தின் அன்புக் கணவரும் முத்தம்மா, தங்கம்மா, பராசக்தி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், குணமாலை, தர்மரெட்னம், இராசமாணிக்கம் (இந்தியா) ஆகியோரின் மாமனாரும், விமலாதேவி பாலசுப்பிரமணியம் (குவைற்), ரேகவதி, ரதிதேவி, நீதிராசா, ஜெயந்தன், யோகலிங்கம் (குவைற்), தவராசா, செல்வராசா, சிவராசா, தருமராசா, சோதிலிங்கம் தயாநிதி பேரானி அனுசுயா, சத்தியகுமாரி (சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), சிறிஸ்கந்தராசா (சுவிஸ்) ஆகியோரின் பேரனாரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ந. தருமரெட்னம்
348, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

(7997)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.